பதிவு அஞ்சல்
ஒப்புதல் அட்டையுடன்

கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: வெ. அன்புச்செல்வன், இ.ஆ.ப.,

ந.க.எண். 3431/2018/பேரூ2 நாள். 30.11.2018

வரப்பெற்றது.

பேரூராட்சி அலுவலகம் - 5 DEC 2018 குறிஞ்சிப்பாடி - 607 302 கடலூர் மாவட்டம்

பொருள்: பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – கடலூர் மாவட்டம் – குறிஞ்சிப்பாடி பேரூராட்சி – வரித்தண்டலர் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய 2015–2016 ஆண்டுக்கான தொகுதி IV–ல் அடங்கிய நேரடி போட்டி தேர்வில் இளநிலை உதவியாளராக தெரிவு செய்யப்பட்டது – கடலூர் மாவட்டப் பேரூராட்சிகள் அலகில் ஒதுக்கீடு செய்யப்பட்டு வரித்தண்டலராக பணியில் இணைந்தது – வரித்தண்டலர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை :
1) அரசாணை எண்.271, ஊரக வளர்ச்சித் துறை, நாள். 04.04.1990.
2) சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடித ந.க.எண்.5434/PSD-H2/2017, நாள். 13.09.2017.
3) கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.156/2016/பேரூ2, நாள்.14.11.2017
4) தொடர்புடைய ஆவணங்கள்.

*****

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய 2015–16ம் ஆண்டுக்கான தொகுதி IV–ல் அடங்கிய நேரடி போட்டி தேர்வு மூலம் இளநிலை உதவியாளர் பணிக்கு தெரிவு செய்யப்பட்டு, பார்வை 2–ல் காணும் கடிதத்தின்படி கடலூர் மாவட்ட பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திருமதி. K. குமாரி என்பவருக்கு பார்வை 3–ல் காணும் கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின் வாயிலாக குறிஞ்சிப்பாடி பேரூராட்சி வரித்தண்டலர் பணியிடத்தில் பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

மேற்காணும் ஆணையின்படி, தொடர்புடைய பேரூராட்சியில் வரித்தண்டலராக பணியில் இணைந்து பணிபுரிந்து வருகிறார்.

**பணி வரன்முறை விபரம்**

| வ. எண் | பணியாளர் பெயர் / பணிபுரியும் பேரூராட்சி | பணியில் இணைந்த நாள் | பணிவரன்முறை செய்யும் நாள் |
|---|---|---|---|
| 1 | திருமதி. K. குமாரி, வரித்தண்டலர், குறிஞ்சிப்பாடி பேரூராட்சி, கடலூர் மாவட்டம். | 24.11.2017 முற்பகல் | 24.11.2017 முற்பகல் |

மேற்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பணிபுரிந்து வரும் பணியாளரின் பணியினை, அவர் வரித்தண்டலராக பணியில் இணைந்த நாளான 24.11.2017 முற்பகல் முதல் அவரது பணியினை கீழ்க்காணும் நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து (Service Regularization) இதன் வழி ஆணையிடப்படுகிறது.

" The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group -IV services / 2015-2016 recruitment "

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
கடலூர் மாவட்டம்.

பெறுதல்

திருமதி. K. குமாரி, வரித்தண்டலர், குறிஞ்சிப்பாடி பேரூராட்சி, கடலூர் மாவட்டம்.
(செயல் அலுவலர் வழியாக)

நகல்: பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை – 108 அவர்களின் தகவலுக்கு அனுப்பப்படுகிறது.

நகல்: செயல் அலுவலர், குறிஞ்சிப்பாடி பேரூராட்சி, கடலூர் மாவட்டம் (உரிய நடவடிக்கைக்காக).